வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 11.04.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

சமூக சீர்திருத்தவாதி ஜோதிபா பூலேவின் பிறந்தநாளை முன்னிட்டு, இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

மேற்காசிய பதற்றத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக அமெரிக்காவும் – ஈரானும் இஸ்லாமாபாத்தில், இன்று, நேரடி பேச்சுவார்த்தை நடத்துகின்றன.

கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரையிலான தமிழக கிழக்கு கடற்கரைப் பகுதியில், மீன்பிடி தடைக்காலம் வரும் 15ஆம் தேதி தொடங்குகிறது.

வில்லியனூரில் மிகவும் பழமை வாய்ந்த தூய லூர்து அன்னை திருத்தலத்தின் 149-வது ஆண்டு பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

***ஜோதிபா பூலே -1 (11)***

சமூக சீர்திருத்தவாதியும், சமூக ஆர்வலருமான மகாத்மா ஜோதிபா பூலேவின் பிறந்தநாளை முன்னிட்டு, இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது. 1827-ஆம் ஆண்டு இதே நாளில் பிறந்த மகாத்மா பூலே, தனது மனைவி சாவித்திரி பூலேவுடன் இணைந்து, சாதி அமைப்பு மற்றும் தீண்டாமையை ஒழிப்பதற்காகப் போராடியதுடன், பெண்களின் கல்வி மற்றும் அதிகாரம் அளித்தலுக்காகவும் பாடுபட்டார்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி,

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, மத்திய அமைச்சர்கள் மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரேர்ணா ஸ்தலத்தில் ஜோதிபா பூலேவுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். மேலும், இது குறித்த கூடுதல் தகவல்...

### ஜோதிபா பூலே - *2 (18)*

மகாத்மா ஜோதிபா பூலே ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்ட சமூக சீர்திருத்தவாதி ஆவார். இந்தியாவில் நிலவிய கடுமையான சாதி அமைப்பை எதிர்ப்பதிலும், பெண்கள் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினருக்கான கல்வி மற்றும் சமத்துவத்தை முன்னிறுத்துவதிலும் அவர் முக்கியப் பங்காற்றினார்.

1873-ஆம் ஆண்டில், ஒடுக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காக அவர் சத்யசோதக் சமாஜத்தை நிறுவினார். ஜோதிபா பூலேவின் சித்தாந்தம் சமத்துவம், நீதி மற்றும் பகுத்தறிவு ஆகியவற்றில் வேரூன்றியிருந்தது. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தலுக்கான அவரது அயராத தேடல் இந்திய சமூகத்தில் அழியாத முத்திரையைப் பதித்தது.

சமூக சீர்திருத்தவாதி மகாத்மா ஜோதிபா பூலேவின் 200ஆவது ஆண்டு பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மகாத்மா ஜோதிபா பூலே, சமூகத்தில் பின்தங்கிய மக்களின் மேம்பாட்டிற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மகாத்மா ஜோதிபா பூலேவின் வாழ்க்கை சமூக நலனுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

### ஜோதிபா பூலே - *3 (4)*

மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா வெளியிட்டுள்ள பதிவில், மகாத்மா ஜோதிபா பூலே, மிகப் பெரிய சமூக சீர்திருத்தவாதி என்று புகழாரம் சூட்டியுள்ளார். இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

***அமெரிக்கா – ஈரான் பேச்சுவார்த்தை (18)***

மேற்காசிய பதற்றத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக அமெரிக்காவும் – ஈரானும் இஸ்லாமாபாத்தில், இன்று, நேரடி பேச்சுவார்த்தைகள் மேற்கொள்கின்றன. அமெரிக்க துணை அதிபர் திரு. ஜே.டி.வான்ஸ் மற்றும் ஈரான் நாடாளுமன்றத் தலைவர் திரு. முகமது பஹேர் தலைமையிலான இருதரப்பு உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்கின்றனர். இதற்காக, பாகிஸ்தான் புறப்பட்டுள்ள திரு. ஜே.டி.வான்ஸ், இந்த பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஈரான் நாடாளுமன்ற தலைவர், திரு. Ghalibaf வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பரஸ்பரம் எட்டப்பட்ட முடிவுகளான, லெபனானில் போர்நிறுத்தம் மற்றும் ஈரானின் முடக்கப்பட்ட சொத்துக்களை விடுவித்தல் ஆகியவற்றை, அமெரிக்கா இதுவரை நிறைவேற்றவில்லை என்று குறிப்பிட்டார். பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர், இந்த 2 முடிவுகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் திட்டம், பாலிஸ்டிக் ஏவுகணை மேம்பாடு மற்றும் ஹார்முஸ் நீரிணை ஆகியவை குறித்து இந்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

***ஜெய்சங்கர் – ஈரான் (5)***

ஈரானில் இருந்து 345 இந்திய மீனவர்கள் அர்மீனியா வாயிலாக இந்தியாவிற்கு அனுப்பப் பட்டுள்ளதாக, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். இதற்காக, அர்மீனிய அரசு மற்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. அராரத்-திற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக, டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

***மீன்பிடி தடைகாலம் (7)***

கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரையிலான தமிழக கிழக்கு கடற்கரைப் பகுதியில், மீன்பிடி தடைக்காலம் வரும் 15ஆம் தேதி தொடங்குகிறது. இதையடுத்து, ஆழ்கடலுக்கு சென்ற மீனவர்கள் வரும் 14ஆம் தேதிக்குள் கரை திரும்புமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. மீன்களின் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு, ஆண்டுதோறும் ஏப்ரல் 15ஆம் தேதி முதல், ஜுன் 15ஆம் தேதி வரை, 61 நாட்களுக்கு விசை மற்றும் இழுவை படகுகளுக்கு தடை விதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

***மேற்கு வங்கம் – பிரச்சாரம் -1 (19)***

அகதிகளுக்கு முழு அரசியலமைப்பு உரிமை கிடைக்கும் என்றும், ஊடுருவல்காரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வலியுறுத்தினார். மேற்கு வங்க மாநிலம் கட்வாவில் இன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், மாநிலத்தில் பாஜக அரசு அமைந்த பிறகு, தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், குடியுரிமை திருத்தச் சட்டத்தின் கீழ் குடியுரிமை வழங்கும் செயல்முறை விரைவுபடுத்தப்படும் என்றார்.

ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மீது கடுமையாக தாக்குதல் தொடுத்த திரு. மோடி, அதன் 15 ஆண்டுகால ஆட்சி வங்காளத்தின் ஒவ்வொரு குடிமகனுக்கும் பயத்தைத் தவிர வேறொன்றையும் கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினார். மாநிலத்தில் அரசியல் வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது பாஜக கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று அவர் கூறினார்.

ஊடுருவல்காரர்கள் தங்கள் உடைமைகளை மூட்டை கட்டத் தொடங்க வேண்டும் என்று கூறிய அவர், ஊடுருவல்காரர்கள் வெளியேற வேண்டிய நேரம் இது என்று கூறினார். சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு உதவியவர்கள் தப்ப மாட்டார்கள் என்றும் பிரதமர் கூறினார்.

பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷாவும் மேற்கு வங்கத்தின் ஒண்டாவில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

***மேற்கு வங்கம் – பிரச்சாரம் - 2 (10)***

அப்போது பேசிய அவர், திரிணாமுல் காங்கிரசின் சிண்டிகேட் ராஜ்ஜியம் மேற்கு வங்க அரசை சீரழித்தது என்று திரு. அமித் ஷா குற்றம் சாட்டினார். மேற்கு வங்க இளைஞர்கள் மாநிலத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு சரியான விலை பெறவில்லை என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, மற்ற மாநிலங்களில் வங்காள மொழி பேசும் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் பாரதிய ஜனதா கட்சியை விமர்சித்துள்ளார். வங்காளத்தை பிளவுபடுத்த பாஜக சதி செய்கிறது என்று அவர் குற்றம் சாட்டினார்.

***வில்லியனூர் தேர்த்திருவிழா -1 (5)***

புதுச்சேரி வில்லியனூரில் மிகவும் பழமைவாய்ந்த தூய லூர்து அன்னை திருத்தலத்தின் 149-வது ஆண்டு பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு மாதாவை வழிபட்டுச் சென்றனர். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

***வில்லியனூர் தேர்த்திருவிழா -2 (17)***

புதுச்சேரி வில்லியனூரில் அமைந்துள்ள தூய லூர்து அன்னை திருத்தலம் வரலாற்று சிறப்பு மிக்கதாகும். பிரான்ஸ் நாட்டின் லூர்து நகருக்கு அடுத்து உலகிலேயே லூர்து மாதாவிற்கென கட்டப்பட்ட 2-வது ஆலயம் வில்லியனூர் மாதா ஆலயமாகும். அதுமட்டுமல்லாது ஆசிய கண்டத்திலேயே தமிழர் பண்பாட்டின் படி ஆலயத்தின் எதிரே குளம் அமைந்திருப்பது இந்த ஆலயத்தின் தனிச்சிறப்பு ஆகும்.

இந்த ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஈஸ்டர் பண்டிகை முடிவடைந்த வாரத்தில் சனிக்கிழமை அன்று ஆண்டு விழா கொடியேற்றத்துடன் தொடங்குவது வழக்கம். அதன்படி 149-ம் ஆண்டாக இந்த ஆண்டிற்கான பெருவிழா இன்று கொடி யேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி காலை 5.30 மணிக்கு அருள்நிறை

தஞ்சாவூர் மறைமாவட்ட ஆயர் சகாயராஜ் தலைமையில் கூட்டு திருப்பலி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து லூர்து அன்னையின் உருவம் தாங்கிய திருக்கொடி மாதா குளத்தை சுற்றி பவனி வந்தது. தொடர்ந்து ஆலயம் முன்பு உள்ள கொடிமரத்தில் பெருவிழா கொடியேற்றப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு மாதாவை வழிபட்டனர்.

***வில்லியனூர் தேர்த்திருவிழா - 3 (8)***

திருவிழா நாட்களில் தினமும் காலை மற்றும் மாலை 6 மணிக்கு திருப்பலி, மறையுரை, நவநாள் மற்றும் சிறிய தேர்பவனி நிகழ்ச்சிகள் 9 நாட்கள் நடைபெற உள்ளன. மேலும் ஏப்ரல் 19-ந் தேதி காலை 7.30 மணிக்கு புதுவை-கடலூர் உயர்மறைமாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெற உள்ளது. அன்று இரவு 7.30 மணிக்கு வேலூர் மறைமாவட்ட ஆயர் அம்புரோஸ் பிச்சைமுத்து தலைமையில் திருப்பலி நடைபெற்று, ஆண்டு பெருவிழாவின் முக்கிய நிகழ்வாக மாதாவுக்கு வைர கிரீடம் பொருத்தப்பட்டு ஆடம்பர தேர் பவனி நடைபெறுகிறது.

***விக்ரம் மிஸ்ரி (12)***

இந்தியா – அமெரிக்கா இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பு குறித்து, மத்திய வெளியுறவுத் துறைச் செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி உடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்றதாக, இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் திரு. செர்ஜியோ கார் கூறியுள்ளார். சிவில் அணுசக்தி, நிலக்கிரி மற்றும் எரிபொருள் சார்ந்த ஏற்றுமதி தொடர்பாக இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக இருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

இந்தியாவின் எரிசக்தி கொள்கையில், நீடித்த அணுசக்தி தொழில்நுட்ப கட்டமைப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது முக்கிய மைல் கல் என்றார். இந்த மசோதா இந்தியாவின் அணுசக்தி கட்டமைப்பை நவீனமயமாக்கி பாதுகாப்புத் தரத்தை உயர்த்தி, சர்வதேச வாய்ப்புகளுக்கு திறவு கோலாக அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

***கிரிக்கெட் (3)***

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில், இன்று இரவு 7.30 மணிக்கு சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி – டெல்லி கேபிடல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

சமூக சீர்திருத்தவாதி ஜோதிபா பூலேவின் பிறந்தநாளை முன்னிட்டு, இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

மேற்காசிய பதற்றத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக அமெரிக்காவும் – ஈரானும் இஸ்லாமாபாத்தில், இன்று, நேரடி பேச்சுவார்த்தை நடத்துகின்றன.

கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரையிலான தமிழக கிழக்கு கடற்கரைப் பகுதியில், மீன்பிடி தடைக்காலம் வரும் 15ஆம் தேதி தொடங்குகிறது.

வில்லியனூரில் மிகவும் பழமை வாய்ந்த தூய லூர்து அன்னை திருத்தலத்தின் 149-வது ஆண்டு பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.